**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**RLTOP No. 1 /2025**

வாக்குமூலம் ம.சா.2 – முத்து

**04.02.2026 : சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் மடத்தில் எத்தனை வருடமாக மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் கடந்த 2017 ஆம் வருடம் பிப்ரவரி மாதத்திலிருந்து பணிபுரிந்து வருகிறேன். செல்வராஜ் என்பவர் தலைவராக இருந்த போது வழக்கு கடைகள் சம்பந்தமாக ஏற்கனவே RCOP 1 முதல் 24 வரை வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கு நிலுவையில் இருந்த போது வேறு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றால் சரிதான். தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கும், கடை வைத்திருப்பவர்களுக்கும் இடையே புதிதாக வாடகை 70 சதவீதம் உயர்த்தி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாண்டிய வேளாளர் மடத்தின் வங்கிக் கணக்கு நான் நிர்வகித்து வருகிறேன் என்றால் இல்லை. தலைவரும் பெருளாளரும் தான் நிர்வகித்து வருவார்கள். நான் மடத்தில் என்ன நிர்வாகம் செய்து வருகிறேன் என்றால் ரூம் புக்கிங் செய்வது, வாடகை வசூலிப்பது போன்ற வேலைகள் செய்து வருகிறேன். நிர்வாகத்தின் வங்கிக் கணக்கு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நிர்வாகத்திற்கு தனலட்சுமி வங்கியில் கணக்கு உள்ளது என்றால் சரிதான்.

2. நான் நிரூபண வாக்குமூலத்தில் 4 ஆம் பத்தியில் அப்போதே நிர்வாகிகளிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க சுமூக பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வாடகை நிர்ணயிக்கப்பட்டது அதன்படி எதிர்மனுதாரர் மாத வாடகையாக ரூ.10,800 செலுத்த ஒப்புக்கொண்டார் அதனால் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்திருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்று கூறிவிட்டு தற்போது மேற்படி விபரம் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் தற்போது தான் விசாரணைக்கு வருகிறேன். எதிர்மனுதாரர் தற்போது வரை வாடகை செலுத்தி வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 6 மாதம் வாடகை செலுத்தவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் பழைய வாடகை தொகையினை சதுரடி 1க்கு ரூ.40 வீதம் உயர்த்துவது சம்பந்தமாகவும், புதிய வாடகை ஒப்பந்தம் எழுதி பதிவு செய்து கொள்வது சம்பந்தமாகவும்

முடிவு செய்யப்பட்டது என்று சொல்லியுள்ள விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நிர்வாகத்தில் கலந்தாய்வு கூட்டத்தில் சொல்லியதன் பேரில் தெரியும். வாடகை ஒப்பந்தத்தை 2 மாதத்திற்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதன் பேரில் எத்தனை கடைகள் வாடகை ஒப்பந்தம் பதிவு செய்துள்ளது என்றால் ஒரு கடை தான் பதிவு செய்துள்ளது மற்ற கடைகள் பதிவு செய்ய தயாராக உள்ளார்கள். தற்போது வரை பதிவு செய்யவில்லை. எதிர்மனுதாரர் மேற்படி கலந்தாய்வு கூட்டத்தில் மடத்தின் சட்ட திட்டங்களுக்கு ஒப்புக் கொள்வது போல் பாசாங்கு செய்தார் என்று கூறியுள்ளேன். அந்த கூட்டத்தில் எதிர்மனுதாரர் என்ன சொன்னார் என்றால் எதிர்மனுதாரரும் நிர்வாகமும் மேற்படி ஒப்புக் கொண்டதற்கு ஒத்துப்போகவில்லை. தன்னிச்சையாக எதிர்மனுதாரர் அனுப்பிய வரைவோலையை நாங்கள் எதிர்மனுதாரருக்கு அறிவிப்புடன் திருப்பி அனுப்பினோம் என்று நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளோம் எவ்வளவு தொகை எதிர்மனுதாரர் அனுப்பியுள்ளார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

3. வேலுமணி என்பவர் ரூ.12,820/– ராஜாமணி ரூ.6900/– பீமநாதன் ரூ.8280/– ரூபாயும் வரைவோலையை மூலம் செலுத்தினார். இதற்கு முன் செலுத்தப்பட்ட வாடகைக்கு கொடுத்த ரசீதை நான் தான் பராமரித்து வருகிறேனா என்றால் நான் தான் பராமரித்து வருகிறேன். பழைய வாடகை ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் யார் சொன்னதன் பேரில் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் நிர்வாகத் தலைவர் மற்றும் செயலாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். அவ்வாறு சாட்சி சொல்வதற்கு நிர்வாகத்தில் எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். அதற்கு ஆதரவாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எப்போது எனக்கு அதிகாரம் கொடுத்தார்கள் என்றால் நிர்வாக கூட்டத்தில் சொன்னார்கள். எந்த தேதி என்று ஞாபகமில்லை. அதிகாரம் கொடுத்து எந்த தீர்மானமும் ஏற்படுத்தவில்லை அப்படி தீர்மானம் ஏற்படுத்தியிருந்தால் அதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நிர்வாகம் தன்னிச்சையாக வாடகை உயர்த்தினார்கள் என்றால் இல்லை. 3 முறை நிர்வகமும், கடைக்காரர்களும் சேர்ந்து கூட்டம் நடத்தி அதற்கு பின்பு தான் வாடகை உயர்த்தினார்கள். நியாய வாடகை நிர்ணயக் குழு உள்ளது பற்றி தெரியும். மேற்படி குழுவில் வாடகை உயர்த்துவது சம்பந்தமாக உங்கள் நிர்வாகத்திலிருந்து அனுமதி கேட்டு மனு கொடுக்கப்பட்டதா என்றால் தலைவர், செயலாளர் மூலம் மனு கொடுக்கப்பட்டது. நியாய வாடகை நிர்ணயக்குழுவிடமிருந்து குறிப்பிட்ட

வாடகை தான் நிர்ணயிக்க வேண்டும் என்று அறிவிப்பு ஏதும் வரவில்லை என்றால் சரிதான்.

4. முந்தைய நிர்வாகிகள் நிர்ணயித்த வாடகையை எதிர்மனுதாரர் தற்போது வரை செலுத்தி வருகிறார் என்றால் இல்லை. இந்த வாடகை எங்கள் மடத்தின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் இல்லை. மடத்தின் நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பீமநாதன், வேலுமணி ஆகியோரின் தகப்பனார் எங்கள் மடத்திற்கு அட்வான்ஸ் தொகை செலுத்தியுள்ளார்கள் என்றால் இல்லை அதற்கு ரசீது எதுவும் இல்லை. பீமநாதன், வேலுமணி ஆகியோரின் தகப்பனார் காலத்திலிருந்தே காலத்திலிருந்தே கடை நடத்திவருகிறார்கள் என்றால் அதுப் பற்றி தெரியாது.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி